தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2022. மே. 30 |

**அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவை நிச்சயப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினை மத்திய வங்கி மீளுறுதிப்படுத்துகின்றது**

இலங்கைக்குப் பொருட்களை இறக்குமதி செய்யும் பட்சத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு திறந்த கணக்குக் கொடுப்பனவு நியதிகள் அல்லது சரக்குக் கணக்கு நியதிகளைப் பயன்படுத்துவதனைக் கட்டுப்படுத்தி, 2022 மே 06ஆம் திகதியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை 2022 மே 20 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியமைச்சு வெளியிட்டது.

உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏனைய பல்வேறு வழிமுறைகளுடன் இவ்வழிமுறை இணைந்து செல்கின்றது.

மேற்கூறிப்பிடப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாரியளவிலானதொரு பற்றாக்குறை ஏற்படுமென வர்த்தக சமூகத்தின் பல்வேறு குழுக்களுக்கு மத்தியில் கரிசனைகள் எழுந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்பின்னணியில், இலங்கை மத்திய வங்கி தொடர்ந்துவரும் காலப்பகுதியில் உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக வங்கித்தொழில் முறைமையினுள் வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவை நிச்சயப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினை மீளுறுதிப்படுத்த விரும்புகின்றது. மேலும், கொடுப்பனவு நியதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களில் பற்றாக்குறைகளை ஏற்படுத்தாதெனவும் அவை ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு எவ்வித இடையூறுகளையும் தோற்றுவிக்காதெென்பதனையும் நிச்சயப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றை எடுத்துக்காட்ட விரும்புகின்றது.

அ) இலங்கை மத்திய வங்கி அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளை வசதிப்படுத்துவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் சமூகத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளது. கொடுப்பனவு நியதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் செலாவணி வீத நிர்ணயப் பொறிமுறையின் அறிமுகம் என்பவற்றினைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமற்ற சந்தை நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க மிதமடைதல் காணப்படுகின்றது. இது வங்கித்தொழில் முறைமைக்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைத் தோற்றுவித்துள்ளதன் மூலம் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலைமைகளை அதிகரித்துள்ளது.

இவ்வுத்வேகம் எதிர்வரும் காலப்பகுதியில் தொடருமெனவும் 2022 மாச்சு தொடக்கம் இடம்பெற்ற செலாவணி வீதத்தின் துரிதமான தேய்வடைதலில் திருத்தத்தினை விரைவடையச் செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இத்தகைய மேம்பாடு மற்றும் திரவத்தன்மை நிலைமைகளில் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட அதிகரிப்பு என்பன அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளை வசதிப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணியை வழிப்படுத்தத் துணைபுரியும்.

ஆ) இலங்கை மத்திய வங்கி அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ள வர்த்தக அமைப்பு மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. இதற்கமைய, தற்போது அத்தியாவசியப் பொருட்களின் இருப்புக்களின் கிடைப்பனவையும் தொடர்ந்துவரும் காலப்பகுதியில் அதன் மாதாந்த தேவைப்பாட்டினையும் அடையாளங்காணும் பொருட்டு வர்த்தக அமைச்சு, நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் இலங்கைச் சுங்கம் என்பவற்றின் பங்குபற்றலுடன் பூர்வாங்க மதிப்பீடொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்தகைய கண்டறிதல்களின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசாங்கத்தினால் உடன்பட்டுள்ள தற்போதுள்ள கொடுகடன் வசதியினைப் பயன்படுத்துவதற்கு தற்போதைய ஏற்பாட்டுடன் இணைந்து அவசியமான அளவுகளிலும் இடைவெளிகளிலும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளை நிச்சயப்படுத்தும் பொருட்டு ஏற்பாடொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இ) அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர் சங்கம் என்பன அவை உத்தியோகபூர்வமற்ற சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை எனவும் இச்சவால்மிக்க பொருளாதார நிலைமைகளினூடாகப் பயணிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் அண்மைய கலந்துரையாடலில் மத்திய வங்கியிடம் உத்தரவாதமளித்தன. இதற்கமைய, மற்றையவற்றிற்கிடையில் இந்திய கொடுகடன் வசதிக்குக் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணைந்து எதிர்வரும் காலப்பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் போதுமாந்தன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு கூட்டு முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஈ) சுங்கத்தில் இருக்கின்ற இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களை அகற்றுவதன் மூலம் வர்த்தகர்களுக்கான செலவினங்களைக் குறைக்கும் வேளையில் முன்னுரிமையின் அடிப்படையில் சந்தைக்கு இருப்புக்களை விடுவிப்பதற்கு ஏனைய முகவராண்மைகளுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு என்பன வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றன.

உ) ஏற்றுமதியாளர்களை அவர்களின் ஏற்றுமதிகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்யும் போது வசதிப்படுத்துவதற்கும் திறந்த கணக்குக் கொடுப்பனவு / சரக்குக் கணக்கு நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அவர்களது ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவதற்கும் ஏற்கனவே வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வேற்றுமதியாளர்களுக்கு வழங்கலினை மேற்கொண்டு வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் உள்நாட்டு வழங்குநர்களும் திறந்த கணக்குக் கொடுப்பனவு/ சரக்குக் கணக்கு நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சவாலான சூழ்நிலையில் வர்த்தக சமூகம் மற்றும் பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கி பணிவுடன் வேண்டிக்கொள்ள விரும்புகின்றது. வர்த்தக சமூக மட்டத்தில் உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் அதிகளவிலான இறக்குமதி மற்றும் பெருமளவிலான கையிருப்பு அதேபோன்று நுகர்வோர் மட்டத்தில் அவற்றின் ஏதேனும் அதிகளவிலான கொள்வனவு என்பன இவ்வாறான சூழ்நிலைகளில் விரும்பத்தகாதனவாகும். வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவு தொடர்பில் நாடு எதிர்கொண்டுள்ள தடைகளைக் கருத்திற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்களின் தடங்கலற்ற வழங்கலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பற்றாக்குறையான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினைக் கணக்கிடப்பட்ட முறையொன்றில் முகாமைத்துவம் செய்ய வேண்டியது பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களதும் கடமையாகும். நாடு வலுவான நிலைக்குத் திரும்பி வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான இயலுமையினைப்பெற்றவுடன் எதிர்வரும் காலப்பகுதியில் வர்த்தக சமூகமும் பொது மக்களும் சமமாகப் பயனடைவர்.